செயற் பொறியாளர், பொபது., கட்டிட (கட்டுமானம்) கோட்டம்-2,
மருத்துவப் பணிகள், எழும்பூர், சென்னை -8.

முன்னிலை: பொறி. எஸ். முத்தமிழ் அரசு, பி.இ.,
செயற் பொறியாளர், பொபது.,

செயல்முறை ஆணை எண்.நிஎ1 /314-3/2021 நாள்:01.09.2021.

பொருள்: பணியமைப்பு - தமிழ் நாடு அமைச்சுப் பணி தொகுதி - தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-19 மற்றும் 2019-20-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2496/PSD-I/2020 நாள். 29.05.2020.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்3(3)/35935/2020 நாள் 17.09.2020.

இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்கள்

3. நிஎ1/314-1/2020 நாள் 23.09.2020.
4. நிஎ1/314-2/2020 நாள் 23.09.2020

*******

தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-19 மற்றும் 2019-20-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் மூலமாக தெரிவு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி இக்கோட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்த திரு.ஜெ.வினோத்,(பி.தே.20.06.1988) இளநிலை உதவியாளர் மற்றும் திரு.லா.லார்சன்(பிறந்த தேதி 30.11.1996) இளநிலை உதவியாளர் தமிழ் நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, தமிழ் நாடு சட்டம்14/2016 பிரிவு 28(1)-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | தேர்வாணைய வரிசை எண் | பெயர் மற்றும் பதவி | பிறந்த நாள் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | திரு.ஜெ.வினோத் இளநிலை உதவியாளர் | 20.06.1988 | 23.09.2020 மு.ப. |
| 2 | 61 | திரு.லா.லார்சன் இளநிலை உதவியாளர் | 30.11.1996 | 23.09.2020 மு.ப. |

தனியர்கள் தகுதி காண் பருவத்தினை பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் துவக்கியதாக கருதப்படுவார்கள். மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும்.

மேலும் பார்வை1-ல் காணும் தமிழ் நாடு அரசு பணியாளர் தோவாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கூறிய இளநிலை உதவியாளருக்கு "சென்னை உயர்நீதிமன்ற சென்னை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது" என்ற நிபந்தனையுடன் இப்பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

செயற் பொறியாளர், பொபது.,
கட்டிட (கட்டுமானம்) கோட்டம்-2
மருத்துவப் பணிகள்,
எழும்பூர், சென்னை -5.

பெறுநர்:
திரு.ஜெ.வினோத், இளநிலை உதவியாளர்,
திரு.லா.லார்சன், இளநிலை உதவியாளர்

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமான மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பபடுகிறது.

நகல்: கோப்புக்கு.